திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் காசிராமன் அவர்கள் போட்ட 112-வது கேள்விக்கு ஒரு சப்ளி மெண்ட்டரி கேள்வி கேட்கலாம் என்று அப்போதே விரும்பினேன். இந்த நாடு ஒரு செகுலர் ஸ்டேட். மதசம்பந்தமாகவும் பிரசாரம் செய்ய உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன வேண்டுமென்று கேளுங்கள்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : * * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது துணை வினா கேட்கக் கூடாது. கேள்வி நேரம் முடிந்துவிட்டது.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : அவர் எதற்காக எழுந்தார் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை வினா அனுமதிக்கப்பட வில்லை. இந்த விஷயத்தின் மீது பேச அரை மணி நேர வாதம் வேண்டு மென்று கேட்பதற்காக உறுப்பினர் எழுந்தார் என்று நினைத்தேன் அவருடைய கேள்விக்கு நானே பதில் அளித்துவிட்டேன்.

திரு சி. கிருஷ்ணமூர்த்தி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர்,..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆஃப் ஆர்டருக்கு இடம் ஒன்றும் இல்லை. திரு க. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் கேள்வி கேட்டது பேரவை நிகழ்ச்சியில் இடம் பெறாது.

5. கவன ஈர்ப்பு.

சென்னை மாநகரில் கொசு, ஈ தொல்லையை ஒழித்தல்.

DR. H. V. HANDE : Sir, under Rule 41 of the Assembly Rules I call the attention of the Hon. Minister for Health and Harijan Welfare to a matter of urgent public importance, namely, the mosquito menace in the City of Madras and the need to take immediate steps to eradicate mosquitoes and flies.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் கொசுக்கள் பெருகும் முக்கிய மான இடங்கள் பக்கிங்ஹாம் கால்வாய், கூவம் ஆறு, அடையாறு ஆறு, ஓட்டேரி ஓடை, சன் தியேட்டர் பக்கத்திலிருந்து தொடங்கி சைதாப்பேட்டை டாட்ஹண்டர் நகர் வரை செல்லும் கால்வாய் இடங்கள் ஆகிய இடங்கள் எனக் கூறலாம். சென்னை மாநகரின் ஊடே ஓடும் கூவம் ஆற்றில் ஆகாசத் தாமரை வளர்ந்துள்ளதன் காரணமாகவும், கொசுத் தொல்லை கணிசமாக அதிகரித்தது. பருவமழை பொய்த்ததன் காரணமாக நீர்நிலை களில் அழுக்கு நீர் தேங்கிவிட்டது. இதனாலும் கொசுத் தொல்லை அதி கரித்தது. இத்தகைய இடங்களில் கொசு வளர்வதைக் கட்டுப்படுத்த முறையான ஏற்பாடுகள் இடைவிடாமல் மேற்கொள்ளப்படுகின்றன. இத் துடன் கொசு பெருகுவதற்கு வாய்ப்பான இடங்களாக உள்ள மழை நீர் வடிகால்களில் எல்லாம், கொசு ஒழிப்புப் பணிகளை மேற்கொள்ள சிறப்புப் பிரிவினர் சென்னை மாநகரத்தைச் சேர்ந்த வட்டங்கள் ஒவ்வொன்றிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். கழிவுநீர் அகற்று வசதிகள் இல்லாமலும் சாக் கடைத் தொட்டி நீர் தேங்குமிடங்களாகவும் உள்ள மேற்கு மாம்பலம், கோடம்பாக்கம் போன்ற மாநகர் விரிவுப் பகுதிகளிலும் சிறப்பாக நாட்டம் செலுத்தப்பட்டுள்ளது. இம் மாநகரின் ஊடே செல்லும் முக்கிய ஆறு களின் பகுதிகளில் சிறப்புப் பணியாளர்களை நியமிக்கவும் தனியே நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆறுகளிலுள்ள நீர்ப்பாசிகள், மற் றும் மிதவைப் பொருள்கள் ஆகியவற்றை அப்புறப்படுத்துவதும், ஆறு களில் கொசு பெருகுவதைத் தடுக்கவும் அவற்றில் வீசிடும் துர்நாற்றத் தைப் போக்கவும் அவற்றில் மருந்து தெளித்துத் தூய்மைப் படுத்துவதும் இவர்தம் பணியாகும்.

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

ஒவ்வோர் ஆண்டிலும் வழக்கமாக ஆடி மாதத்தில் (ஜூலை, ஆகஸ்டில்) ஈக்கள் தொல்லை அதிகரித்து வருகிறது. இம் மாநகரத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஈ ஒழிப்பு மும்முர நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக இவ்வாண்டில் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டு ஈ தொல்லை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இம் மாநகரத்தில் கொசுத் தொல்லையை ஒழிப்பது குறித்து, அப்போ திருந்த மாண்புமிகு சுகாதார அமைச்சர் அறையில் 28—11—1968-ம் தேதியன்று, சென்னை மாநகராட்சிப் பொறுப்பதிகாரி, சுகாதார அதிகாரி, சுகாதாரப் பணிகள்-குடும்ப நலத்திட்ட இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர், சுகாதாரப் பணிகள்-குடும்பநலத் திட்ட கூட்டு இயக்குநர் ஆகியோருடன் கலந்தாராயப்பட்டது. புழுக்கொல்லி எண்ணெய் போன்ற மருந்துகள் வழங்கப்படாததால் கொசு ஒழிப்பு வேலை மெதுவாகவே நடந்தது என்றும், மாநகராட்சிக்கு இம் மருந்துகள் இப்போது கிடைத் துள்ளபடியால், கொசுத் தொல்லை பெருமளவிற்கு ஒழிக்கப்படக் கூடு மென்றும் சென்னை மாநகராட்சியின் சுகாதார அதிகாரி விளக்கினர். சென்னை மாநகராட்சி இது குறித்து கூடுமான நடவடிக்கைகளெல்லாம் எடுத்து வருகிறது.

DR. H. V. HANDE : From the statement made by the Hon. Minister it is not clear what are the concrete steps taken by the Government. The Public Health Department of the Madras Corporation is actually in charge of the cleanliness of the City. We find that the city is not at all clean. It is deteriorating. Is it because each medicl officer in the Corporation is in charge of as many as 20 divisions? Will this Government seriously consider at least allotting 8 to 10 divisions only for each of these officers and see that each medical officer is made responsible for the cleanliness of the divisions under his charge? Otherwise Cholera, Jaundice, etc., will increase. Will the Government take serious notice of what I said and eradicate these diseases by taking the measures which I have suggested?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளும், சிப்பந்திகளும் போதுமானவர்களாக இல்லாத காரணத்தினால் தான் இந்த கொசுத் தொல்லையை ஒழிப்பதில் தாமதம் ஏற்பட்டது என்று குறை கூற முடியாது. குறிப்பாக, நான் முன்பு சொன்ன புழுக் கொல்லி எண்ணெய் கொடுக்கப்படாத காரணத் தினால்தான் கொசுத் தொல்லையை ஒழிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இப்பொழுது அந்த எண்ணெய் கிடைத்துவிட்டது. போதுமான சிப்பந்தி களும் அதிகாரிகளும் இருக்கிற காரணத்தினால் விரைவில் எல்லா வித மான நடவடிக்கைகளையும் எடுத்து, கொசுத் தொல்லையை ஒழிக்க உடனடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் சில பஞ்சாயத்து யூனியன்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாமை.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ் அவசரமும் பொது முக்கியமுமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

"திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலுகா, சாத்தான குளம் தொகுதியிலுள்ள உடன்குடி பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு இரண்டு மாத காலமாக சம்பளம் கொடுக்கப்படாத நிலையில் ஆசிரியர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் . . . . . ." (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுதிக் கொடுத்ததைத் தான் உறுப்பினர் அவர்கள் படிக்கவேண்டும்.